**செய்தி வெளியீடு எண்: 03/08/2021** **நாள்: 11.08.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டுவிழா - பள்ளிகளுக்கு இடையிலான போட்டி, இந்தியா – 75 இளைஞர் மாநாடு, சென்னை காட் டேலண்ட் போன்ற நிகழ்ச்சிகள் இணையவழியில் நடத்தப்படுகிறது**

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவை (Azadi ka Amrut Mahostav), கொண்டாடிடும் வகையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னையில் உள்ள இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் யங் இந்தியன்ஸ் உடன் இணைந்து 1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கான பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகள், கல்லூரி மாணவர்களுக்கான "இந்தியா - 75 இளைஞர் மாநாடு" மற்றும் சென்னை தினத்தை (22.08.2021) கொண்டாடிடும் வகையில் "சென்னை காட் டேலண்ட்" போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை இணையவழியில் நடத்தவுள்ளது.

தற்போது பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகள் மற்றும் சென்னை காட் டேலண்ட் ஆகியவற்றுக்கான பதிவுகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகளுக்கான பதிவுகள் 12.08.2021, வியாழக்கிழமை முடிவடைகிறது மற்றும் சென்னை காட் டேலண்டிற்கான பதிவுகள் 15.08.2021, ஞாயிற்றுக்கிழமை முடிவடைகிறது. "இந்தியா - 75 இளைஞர் மாநாடு" போட்டி 12.08.2021, வியாழக்கிழமை நடைபெறுகிறது.

மேற்கூறிய போட்டிகளில் பங்குப்பெற விருப்பம் உள்ளவர்கள், பதிவு செய்ய மற்றும் கூடுதல் விவரங்களுக்கு கீழே உள்ள இணைப்புகளை கிளிக் செய்யவும்;

- பள்ளிகளுக்கு இடையிலான போட்டிக்கு https://yiyuva.in/schools/ இணைப்பை கிளிக் செய்யவும்;
- "இந்தியா - 75 இளைஞர் மாநாடு" போட்டிக்கு https://youngindians.glueup.com/event/youth-conclave-the-future-41514/ இணைப்பை கிளிக் செய்யவும்;
- "சென்னை காட் டேலண்ட்" போட்டியில் பதிவு செய்ய மற்றும் வீடியோ பதிவேற்றம் செய்ய https://yiyuva.in/cgt/ இணைப்பைக் கிளிக் செய்யவும்;

மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இணைய வழியில் நடைபெறும் இந்த போட்டிகளில் அதிக அளவில் பங்குப்பெற்று இந்நிகழ்ச்சிகளை சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**